

பேளூர் அரசு மருத்துவமனையில் ரூ. 75 லட்சம் மதிப்பீட்டில் சுகாதாரம் கூடுதல் கட்டிடம் அமைக்க பூமிபூஜை நடைபெற்றது.

# பேளூர் அரசு மருத்துவமனையில் கூடுதல் கட்டிடம் அமைக்க பூமிபூஜை!

வாழப்பாடி, ஆக.9
சேலம் மாவட்டம் வாழப்பாடி அருகே பேளூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில், இன்று 15 வது நிதிகுழு சுகாதார மானியத்திட்டத்தின் கீழ் ரூ. 75 லட்சம் மதிப்பீட்டில் சுகாதாரகூடுதல் கட்டடம் அமைப்பதற்கு பூமிபூஜை நேற்று வெள்ளி கிழமை நடைபெற்றது பேளூர் பேரூர் திமுக செயலாளர் சுப்பிரமணியன் கட்டுமான பணியை துவக்கி வைத்தார் பேரூராட்சி மன்ற தலைவர் ஜெய செல்வி பாலாஜி, துணைத் தலைவர் பேபி அம்மாள், ஆகியோர் தலைமை வகித்தார், வட்டார மருத்துவ அலுவலர் பொன்னம்பலம், சித்த மருத்துவர் லட்சுமணன், மருத்துவர் சிவலிங்கம், பேரூர் திமுக அவைத்தலைவர் இராமகிருஷ்ணன், ஆகியோர்கள் முன்னிலையில் வகித்தார் இதில் பேரூர் பேரூர் திமுக பொருளாளர் ஜெகதீஷ், பேரூராட்சி மன்ற கவுன்சிலர்கள். லட்சுமிபிரியா முருகன், கோவிந்தம்மாள் குமார், பேரூர் துணைச்செயலாளர் காந்தி மேரி அமுல்தாஸ், மகளிர் அணி அமைப்பாளர் சிந்து ரவி, ஒப்பந்ததாரர் ரவி, மருந்தாளுனர்முருகேசன், சுகாதார ஆய்வாளர் செல்வம், அவிநாசிலிங்கம், விசுவநாதன், செவிலியர்கள் அனுராதா, ரம்பா, சுரேகா, மற்றும் திமுக நிர்வாகிகள் உள்பட பலரும் கலந்து கொண்டனர்.

# தொல். திருமாவளவனுக்கு உற்சாக வரவேற்பு!
## இளம் சிறுத்தைகள் பாசறை வேண்டுகோள்!!

பாப்பிரெட்டிப்பட்டி ஆக. 9
மதசார்பின்மையை காக்க அரூர் நகருக்கு வரும் நாடாளுமன்ற உறுப்பினரும் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவருமான தொல் திருமாவளவன் இளம் சிறுத்தைகள் எழுச்சி பாசறை தொண்டர்கள் சிறப்பாக வரவேற்க வேண்டும் என

விடுதலை சிறுத்தைகள் கட்சியின் இளம் சிறுத்தைகள் எழுச்சி பாசறை மாநில துணை செயலாளர் கி.அதியமான், வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது:

தர்மபுரி மாவட்டம் அரூர் நகருக்கு மத சார்பின்மை பேரணியின் தீர்மானவிளக்க பொதுக்கூட்டம் மற்றும் முப்பெரும் விழாவிற்கு இன்றுமாலை 7 மணி அளவில் நமது கட்சியின் தலைவர் தொல். திருமாவளவன், எம்.பி, கலந்துகொண்டு சிறப்புரை ஆற்ற இருக்கிறார் அது சமயம் தர்மபுரி, மற்றும் கிருஷ்ணகிரி, திருவண்ணாமலை, சேலம், மற்றும் அதனை



சுற்றியுள்ள பகுதிகளில் இருந்து நமது கட்சியின் இளம் சிறுத்தைகள் எழுச்சி பாசறை தொண்டர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்கும்மாறு கேட்டுக்கொள்கிறேன்,

இவ்வாறு அறிக்கையில் தெரிவித்துள்ளார்,

# ஆண்டுக்கு 2 லட்சம் இந்தியர்கள் குடியுரிமை துறக்கின்றனர்!
## மத்திய அரசு தகவல் !!

புது டெல்லி, ஆக.9
இந்திய குடியுரிமையை கைவிட்டு வெளிநாட்டு குடியுரிமை பெறுபவர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு ஆண்டும் அதிகரித்து வருகிறது என்றும் கடந்த ஆண்டு 2 லட்சத்திற்கும் மேற்பட்ட இந்தியர்கள் தங்கள் குடியுரிமையை கைவிட்டதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது. நேற்று மக்களவையில் காங்கிரஸ் எம்.பி. கே.சி.வேணுகோபால் கேட்ட கேள்விக்கு மத்திய வெளியுறவுத்துறை இணையமைச்சர் கீர்த்தி வர்தன் சிங் எழுத்துப்பூர்வமாக பதிலளித்தார். அவர் வெளியிட்ட புள்ளி வரங்க ளின் படி, 2024 ஆம் ஆண்டில் 2,06,378 பேர் இந்திய குடியுரிமையை கைவிட்டனர்.

2020 ஆம் ஆண்டில் 85,256 பேர், 2021 ஆம் ஆண்டில் 1,63,370 பேர், 2022 ஆம் ஆண்டில் அதிகபட்சமாக 2,25,620 பேர் மற்றும் 2023 ஆம் ஆண்டில் 2,16,219 பேர் என தங்கள் குடியுரிமையை கைவிட்டனர்.

இந்த எண்ணிக்கை 10 ஆண்டுகளுக்கு முன்பு இருந்ததை விட இரு மடங்காக அதிகரித்துள்ளது. 2011 மற்றும் 2014 க்கு இடையில், சுமார் 1.2 லட்சம் பேர் மட்டுமே தங்கள் குடியுரிமையை துறந்தனர். தற்போது, உலகளவில் சுமார் 3.43 கோடி வெளிநாடு வாழ் இந்தியர்கள் உள்ளனர். அவர்களில் 1.71 கோடி பேர் இந்திய வம்சாவளியைச்சேர்ந்தவர்கள் மற்றும் 1.71 கோடி பேர் வெளிநாடு வாழ் இந்தியர்கள் என மத்திய அரசு தெரிவித்துள்ளது.

2011 மற்றும் 2014 க்கு இடையில், ஆண்டுதோறும் சுமார் 1.2 லட்சம் பேர் மட்டுமே தங்கள் குடியுரிமையை துறந்தனர். தற்போது இந்த எண்ணிக்கை 2 லட்சமாக அதிகரித்துள்ளது. இந்திய குடியுரிமையை கைவிட்டு வெளிநாட்டு குடியுரிமை பெறுபவர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு ஆண்டும் அதிகரித்து வருகிறது. கடந்த ஆண்டும் இரண்டு லட்சத்திற்கும் மேற்பட்ட இந்தியர்கள் தங்கள் குடியுரிமையை கைவிட்டதாக மத்திய அரசு தெரிவித்தது. இந்த எண்ணிக்கை தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக இரண்டு லட்சத்தை தாண்டியுள்ளது குறிப்பிடத்தக்கது.

# ஓசூர் அரசு கல்லூரியில் இணைய வழி பாடப்பிரிவுகள்!
## 11–ந் தேதி கலந்துரையாடல்!!

ஓசூர், ஆக 9
ஓசூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி செய்தி குறிப்பு:

ஒசூர், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் முதுநிலை பாடப் பிரிவுகளுக்கான மாணவர் சேர்க்கை நடைபெறவுள்ளது. கல்வியாண்டிற்கான எம்.ஏ.தமிழ், ஆங்கிலம்), எம்.காம்.(வணிகவியல்). எம்.எஸ்ஸி. கணிதம், கணினி அறிவியல்) ஆகிய முதுநிலை விண்ணப்பி த்தவர்களுக்கு இணைய பாடப் பிரிவுகளுக்கு வழியில் வரும் 11.08.2025 அன்று சிறப்பு மாற்றுத்திறனாளிகள்.

ஒதுக்கீடும், முன்னாள் இராணுவத்தினர். விளையாட்டு மற்றும் பழங்குடியினர்). 13.08.2025 அன்று பொது இந்த மாணாக்கர் கலந்தாய்வும் நடைபெறவுள்ளது. கலந்தாய்வின் போது மாணாக்கர்கள் தங்களது இணையதளம் மூலம் விண்ணப்பித்த படிவம், மாற்றுச்சான்றிதழ், மதிப்பெண் பட்டியல் சாதிச்சான்றிதழ், ஆதார் அட்டை, வங்கி கணக்கு புத்தக முதல் பக்க நகல். பாஸ்போர்ட் அளவு புகைப்படம் மற்றும் அனைத்து சான்றிதழ்களின் நகல் மூன்று படிவங்கள் ஆகியவற்றினைக்கொண்டு வரவேண்டும் என கல்லூரி முதல்வர். ஜா. பாக்கிய மணி தெரிவித்துள்ளார்.

## நிதி மோசடி தொடர்பான வழக்குகளில்
# மாநில அரசு - சி.பி.ஐ. இடையே ஒருங்கிணைப்பு இல்லை!
## உயர்நீதிமன்ற மதுரை அமர்வு கருத்து!!

மதுரை, ஆக.9–
நிதி மோசடி வழக்குகளில் மாநில அரசுக்கும், சிபிஐக்கும் இடையே ஒருங்கிணைப்பு இல்லை என்று உயர் நீதிமன்ற மதுரை அமர்வு தெரிவித்துள்ளது.

எஸ்பிஐ வங்கியில் ரூ.13.11 கோடி மற்றும் ரூ.3.84 கோடி கடன் முறைகேடு தொடர்பான புகாரை விசாரிக்க சிபிஐக்கு உத்தரவிடக் கோரி, உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் எஸ்பிஐ வங்கி சார்பில் 2 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. இந்த மனுக்களை நீதிபதி பி.புகழேந்தி விசாரித்தார். அப்போது சிபிஐ தரப்பில், மாநிலத்துக்குள் சிபிஐ விசாரணைநடத்தடெல்லி போலீஸ் சட்டப்படி மாநில அரசிடம் அனுமதி பெற வேண்டும். இந்த வழக்கில் தமிழக அரசு விசாரணைக்கு ஒப்புதல் தரவில்லை என்று கூறப்பட்டது.

தமிழக அரசு தரப்பில், “சிபிஐ விசாரணைக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. சிபிஐ முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து விசாரணையைத் தொடங்கலாம்” எனக் கூறப்பட்டது. அதற்கு சிபிஐ தரப்பில், “புகாரில் குறிப்பிட்டுள்ள நபர்கள் குறித்து விசாரணை நடத்தவே அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதனால் மோசடியில் தொடர்புடைய பொது ஊழியர்கள், தனிநபர்களை சேர்க்க நினைத்தால், ஒப்புதல் பெறவில்லை என்று கூற வாய்ப்புள்ளது. இதனால் விசாரணை நடத்த முடியாத நிலை உள்ளது” என்று தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து நீதிபதி பிறப்பித்த உத்தரவின் விவரம்: தமிழக அரசு, சிபிஐ விசாரணைக்கான பொது ஒப்புதலை 2023ல் திரும்ப பெற்றுக் கொண்டது. இதனால் சிபிஐ விசாரிக்க டெல்லி சிறப்பு காவல் சட்டப்படி மாநில அரசிடம் இருந்து ஒப்புதல் பெற வேண்டும். மாநில அரசின் ஒப்புதலில் பொது ஊழியர்கள், தனிநபர்கள் குறித்து எதுவும் கூறப்படாததால், ஒப்புதல் வழங்கப்பட்டு 3 ஆண்டுகளாகியும் விசாரணை நடைபெறாமல் உள்ளது.

இந்த விஷயத்தில் மாநில அரசின் நடத்தையை நியாயப்படுத்த முடியாது. விசாரணை தொடங்குவதற்கு முன்பே சம்பந்தப்பட்ட ஒவ்வொரு நபரைப் பற்றியும் சிபிஐ அறிந்திருக்கும் என்று எதிர்பார்ப்பது நியாயமற்றது. அதேநேரத்தில், ஒப்புதலில் அடையாளம் காணப்படாத தனிநபர்கள், பொது ஊழியர்கள் குறித்து சேர்க்கப்படாததை காரணம் காட்டி, சிபிஐ முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யாமல் இருப்பதும், விசாரணையை நிறுத்துவதும் நியாயமல்ல. அரசு மற்றும் சிபிஐயின் அலட்சியம் மற்றும் ஒத்துழைப்பு இல்லாதது நீதியின் நோக்கத்தை தடம்புரளச் செய்துள்ளது. இதை நிர்வாக குறைபாடாக கருத முடியாது. பொறுப்புகளிலிருந்து தவறுவதாகும். சிபிஐ விசாரணை நடத்தி அனுமதி பெறுவதற்குப் பதிலாக, புகார்களை திரும்ப அனுப்புவது, கடிதங்களை எழுதுவது மற்றும் அமைதியாக இருப்பது என முடிவெடுத்தது சரியல்ல. இந்த நடத்தையை ஏற்க முடியாது. கடும் நிதிக் குற்றங்களில் செயல்படாமல் இருப்பது விசாரணை அமைப்பின் நம்பகத்தன்மையை சிதைக்கிறது.

நிதி தாமதத்துக்கு சிக்கலான நடைமுறைகள் மட்டும் காரணம் அல்ல. 2 துறைகளின் ஈகோ மற்றும் அரசியல் காரணங்களாலும் நிதி தாமதமாகிறது. இந்த செயல்பாட்டை நிதி மன்றம் அமைதியாக பார்த்துக்கொண்டு இருக்க முடியாது. பொதுத்துறை வங்கியில் இருந்து புகார் வந்தவுடன் மாநில அரசின் ஒப்புதல் கிடைத்ததும், அந்த ஒப்புதல் குறிப்பிட்ட நபர்களுக்கு மட்டுமானதாக இருந்தாலும், தாமதம் இல்லாமல் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து விசாரணையை தொடங்க வேண்டும். நடைமுறை தாமதங்களை மறுபரிசீலனை செய்து இனிமேல் இதுபோல் நடைபெறாமல் இருக்க தலைமை செயலாளர், சிபிஐ இயக்குநர் ஆகியோர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்த வழக்கை பொறுத்தவரை சிபிஐ விசாரணை நடத்த வேண்டும். அந்த விசாரணையின்போது, அதேகுற்றத்துடன்தொடர்புடைய பிற தனி நபர்களின்பங்கு பொது ஊழியர்களாக இருந்தாலும் சரி அல்லது தனி நபர்களாக இருந்தாலும்சரி, அவர்கள் மீது சிபிஐ சட்டப்படி சுதந்திரமாக நடவடிக்கை எடுக்கலாம். குற்றத்தில் தொடர்புடையவர்கள் மாநில அரசின் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள பொது ஊழியர்களாக இருந்தால் வழக்குப் பதிவு செய்வதற்கு முன்பு ஊழல் தடுப்புச் சட்டத்தின் கீழ் அனுமதி பெற வேண்டும். அதிக மதிப்புள்ள நிதி மோசடி வழக்குகளில், மாநில அரசுக்கும் சிபிஐக்கும் இடையி லான ஒருங்கிணைப்பை உறுதி செய்ய வேண்டும் என்று நீதிபதி உத்தரவில் கூறியுள்ளார்.



தாரமங்கலம் பொன்னுசாமி மண்டபத்தில் இன்று வாசன் கண் மருத்துவமனை சார்பில் மருத்துவ முகாம் மத்திய மாவட்ட மாணவரணி துனண அமைப்பாளர் சிலம்பரசன் தலைமையில் நடைபெற்றது.சேலம் திமுக மேற்கு மாவட்ட விவசாய தொழிலாளர் அணி அமைப்பாளர் தாரமங்கலம் கந்தசாமி மருத்துவ முகாமை துவக்கி வைத்தார்.

# இன்சூரன்ஸ் ஊழியர்கள் மாநாடு!

சேலம்,ஆக.9
எல் ஐ சி தென்மண்டல இன்சூரன்ஸ் ஊழியர் கூட்டமைப்பின் 36 வது மாநாடு சேலத்தில் ஆகஸ்ட் 9ஆம் தேதி முதல் 11ஆம் தேதி வரை நடைபெற உள்ளது.

மாநாட்டு பேரணி தென்மண்டல தலைவர் கிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றது.

சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் டி. எம். செல்வகணபதி சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு பேரணியை துவக்கி வைத்தார். பேரணியில் 1500 க்கும் மேற்பட்ட இன்சூரன்ஸ் ஊழியர்கள் பங்கேற்றனர். தொடர்ந்து மூன்று நாட்கள் வரலட்சுமி மகாலில் பிரதிநிதிகள் மாநாடு நடைபெற்று வருகிறது. இதில் தென் மண்டல இன்சூரன்ஸ் ஊழியர் கூட்ட அமைப்பின் தலைவர்கள் பங்கேற்றுள்ளனர். இன்சூரன்ஸ் நிறுவனத்தை தொடர்ந்து அரசு நிறுவனமாக செயல்படுத்த வேண்டும்,மக்கள் நலத்திட்டங்களுக்காக தங்களின் பங்களிப்பை செலுத்தி வரும் இன்சூரன்ஸ் நிறுவனத்தின் பங்குகளை தனியாருக்கு விற்பனை செய்யக்கூடாது,தொடர்ந்து பொதுத்துறை நிறுவனமாக பாதுகாக்க வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. தொடர்ந்து ஆகஸ்ட் 10 மற்றும் 11ஆம் தேதி பிரதிநிதிகள் மாநாடு நடைபெறுகிறது தமிழ்நாடு கேரளம் பாண்டிச்சேரி மாநிலங்களை சார்ந்த 300க்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் இந்த மாநாட்டில் பங்கேற்றுள்ளனர்.

## சின்னசேலம் அருகே
# பைக்–லாரி மோதலில் 3 பேர் உயிரிழப்பு!

கள்ளக்குறிச்சி, ஆக.9–
சின்னசேலம் அருகே பைக் மீது லாரி மோதியதில் 3 பேர் உயிரிழந்தனர். கள்ளக்குறிச்சி மாவட்டம் சின்ன சேலம் அடுத்த நாகுப்பத்தைச் சேர்ந்தவர்கள் தங் கராசு மகன் தினேஷ் (25), அய்யம்பெருமாள் மகன் வெங்கடேசன் (26), பழனிசாமி மகன் சிவசக்தி (25). தினேஷ் பஞ்சர் கடை நடத்தி வந்தார். வெங்கடேசன், சிவசக்தி ஆகியோர் லாரி ஓட்டுநர்கள்.

இந்நிலையில், நேற்று முன்தினம் இரவு மூவரும் பைக்கில் சின்னசேலம் புறவழிச்சாலை வழியாக அம்மையகரம் நோக்கிச் சென்றுகொண்டிருந்தனர். சின்ன சேலம் ரயில்வே மேம் பாலத்தில் வந்த போது, அவ்வழியே வந்த சரக்கு லாரி எதிர்பாராத விதமாக பைக் மீது மோதியது.

இந்தவிபத்தில்தினேஷ், வெங்கடேசன், சிவசக்தி ஆகியோர் அந்த இடத்திலேயே உயிரிழந்தனர். தகவலறிந்த சின்னசேலம் போலீஸார்3 பேரின்உடல்களையும் மீட்டு, பிரேதப் பரிசோதனைக் காக கள்ளக் குறிச்சி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப் பிவைத்தனர். மேலும், விபத்து குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர்.


ஆத்தூர் சப் ஜட்ஜ் கோர்ட்டார்
அவர்கள் சமூகம்
REP No. 126/2024
in
O.S No.224/2021
P.கார்த்திக் த/பெ பழனியப்பன் 1வது வார்டு, பைத்தூர் வடக்கு, பைத்தூர் அஞ்சல் ஆத்தூர் வட்டம், சேலம் மாவட்டம்
மனுதாரர் /டிகிரி பெற்றவர்
// இடையே //
R.முரளி த/பெ பழனியாண்டி. டிரைவர் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம்) தொழில் நுட்ப பணியாளர், சேலம்
1ம் எதிர்மனுதாரர் /தீர்ப்பு கடனாளி
அறிவிப்பு
மேற்படி நிறைவேற்று மனுவில் தொகைகளை வசூலிக்கும் பொருட்டு, மனுதாரர் / டிகிரி பெற்றவர், எதிர்மனுதாரர் / தீர்ப்பு கடனாளி வங்கும் சம்பளத்தை ஜப்தி செய்து, பிடித்தம் செய்து தொகையினை வசூல் செய்ய வேண்டி தாக்கல் செய்துள்ளார். மேற்படி மனுவில் எதிர்மனுதாரர் / தீர்ப்பு கடனாளி ஆகிய தாங்கள் வருகிற 01.09.2025 ந் தேதி சமூகம் நீதிமன்றத்தில் ஆஜராவதற்காக வாய்தா நியமிக்கப்பட்டுள்ளது. மேற்படி தேதியில், மேற்படிகோர்ட்டில்தாங்கள்நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ மேற்படி தேதியில் காலை 10.00 ஆஜராக வேண்டும். தவறும் பட்சத்தில் தங்களுக்க எதிராக ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்படும் என்பதனை இதன் மூலம் கண்டிப்பாக அறியவும்.
//கோர்ட்டார் அவர்கள் உத்திரவு படி//
(முல்லை.A.இரவிச்சந்திரன் M.A., B.L.,)
வழக்கறிஞர்/ஆத்தூர்



மாண்பமை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அரூர்.
O.S. 121/2023
சுகுமார் ...வாதி
//எதிராக//
1)விமா, 2) ஜெயபா
3) ராஜேஸ்வரி
6,9,14 பிரதிவாதிகள்
அறிவிப்பு
தருமபுரி மாவட்டம், அரூர் வட்டம், வேப்பம்பட்டி அஞ்சல் மற்றும் கிராமத்தில் சுதவு எவர் 3/103ல் வசிக்கும் இந்து, குடும்ப பெண் ராமலிங்கம் குமார்த்தியும், சுந்தரம் மனைவியுமான விமலா1, தருமபுரி மாவட்டம், அரூர் வட்டம், செல்லம்பட்டி அஞ்சல் மற்றும் கிராமத்தில் க.எண்.8/98ல் வசிக்கும்சாக்கன்குமார்த்தியும், ஜெயராமன் மனைவியுமான ஜெயம் மாள்2 தருமபுரி மாவட்டம், அரூர் வட்டம், கோட்டப்பட்டி அஞ்சல் மற்றும் கிராமத்தில் க.எண்.4/54ல் வசிக்கும் இறந்த ராமமூர்த்தி குமார்த்தியும், சிலம்பரசன் மனைவியுமான ராஜேஸ்வரி3 ஆகிய உங்களுக்கு எதிராக வாதி தாக்கல் செய்துள்ள OS.121/2023 வழக்கு வருகின்ற 18.08.2025ம் தேதி அரூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வாய்தா போடப்பட்டுள்ளது. மேற்கண்டதேதியில்காலை10.00மணிக்கு நேரில் நீங்கள் ஆஜராக வேண்டியது இல்லையேல் உங்களுக்கு எதிராக உத்தரவு ஏற்பட்டுவிடும் என்பதை அறியவும்.
//நீதிமன்ற உத்தரவு படி//
வாதி வழக்கறிஞர்
G.இராதாகிருஷ்ணன் M.Com., B.L,
அரூர்




வாகனங்கள் விற்பனைக்கு
கோடக் மகிந்தரா பேங்க் லிமிடெட் கீழ்கண்ட வாகனங்கள் ஏல விற்பனை செய்ய உள்ளது.
2019 – AL2518 – TN88L0029
2024 – ALBADADOST – TN30CF5317
2023 – AL4825CH – TN52AC6980
2024 – AL4825CH – TN52AD7197
2024 – ALBADADOST – TN29DZ4590
2018 – AL_3118 – TN28BD3976
2024 – Mah Bolero Pickup – TN29CS5465
2018 – AL_3118 – TN88AZ1928
2023 – SWARAJ MAZDA – TN90K0203
2024 – MAH SUPRO MAXI TRUCK – TN28CY9108
வாகனங்கள் அடமானம் வைக்கப்பட்ட வங்கி
கோடக் மகிந்தரா பேங்க் லிட்.,
"எப்படி உள்ளதோ அதே நிலையில்" என்கிற அடிப்படையில் விற்பனை செய்யப்படும். வாங்க விருப்பமுள்ளவர்கள் 7 நாட்களுக்குள் கேட்புத் தொகையுடன் விண்ணப்பிக்கவும்.
கோடக் மகிந்தரா பேங்க் லிட்.,
5-330, சோனியா பிளாசா, முதல் தளம், ஸ்டேட் பேங்க் காலனி, சேலம் - 636 004.
போன் : 0427-4554529.
98947-22008, 96003-63032




பரமத்தி அருகேயுள்ள கூடச்சேரி பகுதியைச் சேர்ந்த விஷ்வா என்ற மாணவர் அரசு உதவி பெறும் கல்லூரியில் பி.காம் சிவ இளங்கலை முதலாம் ஆண்டு படித்து வரும் சூழலில் இருவருடைய குடும்பம் சூழ்நிலை மற்றும் வறுமையை அறிந்த நாமக்கல் மேற்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் மகிழ் பிரபாகரன் கல்வி உதவித்தொகை வழங்கி அவரை ஊக்கப்படுத்தினார்.

# நிலத்தை அபகரித்ததாக கலெக்டரிடம் மனு!

சேலம் ஆக.9
சேலம் மாவட்டம் வலசையூர் பனந்தோப்பு குள்ளம்பட்டி பகுதியை சேர்ந்தவர் மணிவண்ணன். தனது குடும்ப செலவிற்காக தனக்கு சொந்தமான 1.42 ஏக்கர் நிலத்தை காடையாம்பட்டி பகுதியை சேர்ந்த அருள் என்பவர் மூலமாக அடமானம் வைத்துள்ளார். இந்த நிலத்தில் 82 சென்ட் நிலத்தை மட்டும் ரவிச்சந்திரன் என்பவருக்கு 49 லட்சத்து 40 ஆயிரம் ரூபாய்க்கு அடமானக் கிரையம் கொடுக்கப்பட்டது.



மேலும் அருள் என்பவர் தனக்கு 27 லட்சம் கடன் தேவைப்படுவதாகவும் அதற்கு மாதம் தோறும் வட்டி தருவதாகவும் தெரிவித்ததையடுத்து அவருக்கும் கடன் வழங்கியுள்ளனர். கடனை திருப்பி அடிப்பதற்காக ரவிச்சந்திரன் இடம் சென்று கேட்டபொழுது அவர் காலம் தாழ்த்தி வந்தார். இதுகுறித்து விசாரணை மேற்கொண்டபோது ரவிச்சந்திரன் ஏற்கனவே சேலத்தைச் சேர்ந்த தனசேகர் என்பவர் இடத்தில் நிலத்தை விற்பனை செய்தது தெரியவந்தது.

தங்கள் நிலத்தை மீண்டும் தங்களிடம் ஒப்படைக்குமாறு ரவிச்சந்திரனிடம் கேட்டபோது தங்களை அச்சுறுத்தும் வகையில் பேசியும் குடும்பத்தினருக்கு கொலை மிரட்டலும் விடுப்பதால் தங்களுக்கு உரிய பாதுகாப்பு வழங்க வேண்டும், எங்களுக்கு சொந்தமான நிலத்தை மீட்டு தர வேண்டும் என மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பாதிக்கப்பட்ட மணிவண்ணன் குடும்பத்தினர் புகார் மனு அளித்தனர்.


**TANEJA AEROSPACE AND AVIATION LIMITED**
Regd. Office: Belagondapalli Village, Thally Road, Denkanikottai Taluk, Krishnagiri Dist., Belagondapalli - 635114, Tamil Nadu, India Phone : 04347-233508, Fax : 04347-233414, E-mail : secretarial@taal.co.in, Website : www.taal.co.in, CIN : L62200TZ1988PLC014460

**EXTRACT OF THE STATEMENT OF CONSOLIDATED FINANCIAL RESULTS FOR THE QUARTER ENDED JUNE 30, 2025** (INR in lakh except EPS )

| Sr. No. | Particulars | Three Months Ended June 30, 2025 (Un-Audited) | Year Ended March 31, 2025 (Audited) | Three Months Ended June 30, 2024 (Un-Audited) |
|---|---|---|---|---|
| 1 | Revenue from Operations | 852.38 | 4,061.69 | 914.32 |
| 2 | Profit before exceptional items and tax | 512.15 | 2,343.11 | 422.08 |
| 3 | Profit before tax | 512.15 | 2,343.11 | 422.08 |
| 4 | Profit after tax | 353.85 | 1,807.56 | 346.47 |
| 5 | Total comprehensive income for the period | 353.85 | 1,829.37 | 346.47 |
| 6 | Paid up equity share capital (Face Value INR 5 per share) | 1,275.03 | 1,275.03 | 1,275.03 |
| 7 | Reserves excluding revaluation reserves | 13,312.50 | 12,958.66 | 12,113.26 |
| 8 | Earnings / (Loss) per share (of INR 5/- each) (not annualised): | | | |
| | (a) Basic earnings / (loss) per share (INR) | 1.39 | 7.09 | 1.36 |
| | (b) Diluted earnings / (loss) per share (INR) | 1.39 | 7.09 | 1.36 |

**EXTRACT OF THE STATEMENT OF STANDALONE FINANCIAL RESULTS FOR THE QUARTER ENDED JUNE 30, 2025** (INR in lakh)

| Particulars | Three Months Ended June 30, 2025 (Un-Audited) | Year Ended March 31, 2025 (Audited) | Three Months Ended June 30, 2024 (Un-Audited) |
|---|---|---|---|
| Revenue from Operations | 852.38 | 4061.69 | 914.32 |
| Profit before exceptional item and tax | 512.15 | 2,343.17 | 422.08 |
| Profit before tax | 512.15 | 2,343.17 | 422.08 |
| Profit after tax | 353.85 | 1,807.62 | 346.47 |
| Total comprehensive income for the period | 353.85 | 1829.43 | 346.47 |

Notes : 1. The un-audited consolidated financial result and standalone financial results have been reviewed by the Audit Committee and approved by the Board of Directors at its meeting held on 08th August, 2025. 2. The above is an extract of the detailed format of financial results filed with stock exchange under Regulation 33 of the Securities and Exchange Board of India (Listing Obligations and Disclosure Requirement) Regulations, 2015. The full format for three months ended June 30, 2025 are available on the BSE Limited website (URL: www.bseindia.com) and on company's website (www.taal.co.in). The same can be accessed by scanning the QR code provided below.

Place: Pune
Date : August 08, 2025

For and on behalf of the Board of Directors
Rakesh Duda
Managing Director
DIN: 05234273